தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் – ஊனமுற்றோர் நலம் – தமிழகம் முழுவதும் அரசு விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து மற்றும் பிற சேவைகளில் பார்வையற்றோர், உடல் ஊனமுற்றோர் பயணம் செய்ய 75% பயணக் கட்டணச் சலுகை மற்றும் ரூ. 30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.4) துறை

அரசாணை (நிலை) எண். 233 நாள்.03–12–2007

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.109, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 16.4.1997.
2. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண்.9472/ஊ.ந.II–4/2007, நாள் 15.10.2007.

-----

ஆணை:-

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் பார்வையற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் தங்களது சொந்த ஊருக்குச் சென்று திரும்ப, அரசு விரைவுப் பேருந்துகளில் ஆண்டிற்கு ஒரு முறை இலவச பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள் 30–9–2007 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து, தங்களது 15 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டனர். 15 அம்சக் கோரிக்கைகளில் பார்வையற்றோர்/உடல் ஊனமுற்றோர் தமிழகம் முழுவதும் அரசு விரைவுப் பேருந்துகளிலும், சொகுசு மற்றும் பிற சேவைகளில் 75% பயணக் கட்டணச் சலுகை வழங்கக் கோருவதும் ஒரு கோரிக்கையாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பார்வையற்ற மாணவர்களின் இந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு விரைவு, சொகுசு மற்றும் பிற சேவைகளில் பயணம் மேற்கொள்ள 75% கட்டணச் சலுகை வழங்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் கோரியுள்ளார்.

2. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்தப்பின் பார்வையற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் தமிழகம் முழுவதும் அரசு விரைவுப் பேருந்து, சொகுசு மற்றும் பிற சேவைகளில் 75% பயணக் கட்டணச் சலுகையில் பயணம் செய்ய கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது :-

i) ஏற்கெனவே நடைமுறையிலுள்ள பேருந்து பயணச் சலுகையுடன் கூடுதலாக பார்வையற்றோர், ஊனமுற்றோர் ஆண்டுக்கு நான்கு தடவைகள் (இரண்டு பயணங்கள்) அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் அனைத்து சேவைகளிலும் (விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து மற்றும் பிற சேவைகளிலும்) பயணம் செய்ய 75% பேருந்து கட்டணச் சலுகையும் மற்றும் 25% கட்டணத் தொகை பார்வையற்றோர்/உடல் ஊனமுற்றோரிடமிருந்து வசூலிக்கப்படும்.

ii) 75% கட்டணத் தொகையை சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஏற்றுக் கொள்ளும்.

iii) போக்குவரத்துக் கழகங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் மீள வழங்குவதற்கு ரூ.30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இச்செலவினத்தை மேற்கொள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

iv) போக்குவரத்துக் கழகங்கள் உள்ளபடியான இழப்பீட்டுத் தொகையை பட்டியலிட்டு ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

X v) பார்வையற்றோர்/உடல் ஊனமுற்றோர் பயணம் மேற்கொள்ளும் போது, பார்வையற்றோர் பேருந்து நடத்துனரிடம் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டையின் அசலினை காண்பித்து அவ்வட்டையின் நகல் ஒன்றினை நடத்துனரிடம் ஒப்படைக்க வேண்டும்.

vi) இச்சலுகை இம்மாநிலத்திற்குள் பயணம் செய்ய மட்டுமே பொருந்தும்.

3. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ. 30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – உடல் ஊனமுற்றோர் நலன் – BG – உடலூனமுற்றோருக்குப் பயணச் சலுகை 42 – பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள்.

(த.தொ.கு.எண்.2235-02-101-BG-4206)

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.30.00 இலட்சத்திற்கான (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) பயனீட்டுச் சான்றிதழை அரசுக்கு அனுப்புமாறு ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.79403/ச.ந./2007, நாள் 03.12.2007ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு செயலாளர்

பெறுநர்

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை–6
அனைத்து மாவட்ட ஆட்சியர் (ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள் ((ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் ((ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–9/18/35.
மாநில கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35/ சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை (கிழக்கு)

நகல்

போக்குவரத்துத் துறை, சென்னை–9
நிதித் (சமூக நலம்) துறை, சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சமூக நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சார்பு செயலாளர்
Under Secretary to Government
Social Welfare and Nutritious Meal
Programme Department
Secretariat, Chennai-600 009